



ஓலை 119| ஓசை 242| ஏப்ரல் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்**
**கள்ளாமை காக்கதன் நெஞ்சு**

## பொருள்

**பிறரால் இகழப்படாமல் வாழ விரும்புகின்றவன், எத்தன்மையான பொருளையும் பிறரிடமிருந்து வஞ்சித்துக்கொள்ள எண்ணாதபடி தன் நெஞ்சைக் காக்கவேண்டும்.**

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

# ஔவை மொழியில் அமுதப் பாக்கள்

## கொற்றவன் அறிதல் உற்றிடத் துதவி!

அடிமறி மண்டில ஆசிரியப்பா



மேகம் வேர்த்தால் வீழ்தல் மழையே;
ஆக்கம் வேர்த்தால் அதுவே செழிப்பு:
மலையும் வேர்த்தால் மலையரு வியோடும்;
உலையும் வேர்த்தால் உணவாய் வாய்க்கும்;
கடலும் வேர்த்தால் கடலலை யாகும்;
மடலும் வேர்த்தால் மதம்கொளும் யானை;
மரமும் வேர்த்தால் மரப்பா லாகும்;
அரவம் வேர்த்தால் அதுவே நஞ்சு;
பூக்கள் வேர்த்தால் பூவில் மகரந்தம்;
பாக்கள் வேர்த்தால் படையே நடுங்கும்;
மனமும் வேர்த்தால் வள்ளல் குணமே;
இனமும் வேர்த்தால் இனத்தின் வளர்ச்சி;
உடலும் வேர்த்தால் ஓடிடும் நோயும்;
இடரும் வேர்த்தால் இன்னல் பெருக்கும்;
விருப்பும் வேர்த்தால் வையம் கேட்கும்;
கருப்பு வேர்த்தால் காலைப் புலரும்;
வயலும் வேர்த்தால் மகசூல் கூடும்;
புயலும் வேர்த்தால் புவியும் பொசுங்கும்;
உழவர் வேர்த்தால் உணவோ பெருகும்;
நிழலும் வேர்த்தால் நிறைமன மேது?
அகமும் வேர்த்தால் அறமே நிலைக்கும்;
மகனும் வேர்த்தால் மாள்வர் பெற்றோர்;
கொற்றவன் வேர்த்தால் குடிகள் சிறக்கும்.
அற்றிடா உளத்தால் அவரவர் செழிப்பர்;
கொற்றவன் போல குடிகளும் வேண்டும்;
பற்றிலா நெஞ்சம் பெற்றிட வேண்டும்;
எற்றிசை யாயினும் ஏழ்மை முறிப்போம்;
உற்ற உதவிகள் ஓங்கிடச் செய்வோம்;
எல்லா மொன்றென உணர்த்தி வாழ்வோம்;
எல்லை யிலாமல் ஏற்றம் அடைவோம்!




**இலக்கணக் குறிப்பு:**

அடி தோறும் ஈரசைக் கொண்ட இயற்சீரே நான்கு நான்கு சீர்களாக வரும். இரண்டடிக்கோர் எதுகை பெற்று வரும். அடி தோறும் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் மோனை அமையும். ஒவ்வொரு அடியும் பொருள் முடிதல் வேண்டும். கீழிருந்து மேலே, மேலிருந்து கீழே அடிகளை மாற்றிப் போட்டு வாசித்தாலும் பொருள் மாறாது ஒவ்வொரு அடியும் ஏகாரத்தில் முடிதல் வேண்டும் தொடர்ச்சியாக எத்தனை அடிகள் வேண்டுமானாலும் எழுதலாம்.

நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

# நிலா

ஆகாயத்திலிருக்கிறது
இல்லையெனில்
நீர்தளங்களில்
புகுந்து கொள்கிறது
பாய் விரித்து
படுக்கை போட்டும்
பக்கத்தில் வந்து
அமரவுமில்லை
படுக்கவுமில்லை
நிலா.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# தண்ணீரும் கவியெழுதும் அவளுக்காக

மனசெல்லாம் மணம்வீசும் அன்பின் தோழி
மண்வாழ்வில் உயிரான நட்பின் ராணி
தினம்தோறும் பூப்பெய்தும் இதய பாவை
தித்திக்கும் கவிதைகளின் காதல் பூவை
அனலான பார்வைதனில் மலரும் இமைகள்
அலைகடலாய் அணிசேர்க்கும் இவளால் பாக்கள்
வனமெல்லாம் தேவதைகள் வாசம் தந்தால்
வாசலெங்கும் கோலத்தில் காட்சி தந்தாள்

கண்ணுறங்கும் நேரமெல்லாம் கனவாய் அவளும்
கலங்கரையின் ஒளிவிளக்காய் வாழ்வில் இவளும்
எண்ணத்தில் குடியிருக்கும் எழிலின் அரசி
எம்மார்ந்த சோலைகளின் கவிதை வடிவாள்;
மண்ணுலகம் நேசிக்கும் விந்தை விழியாள்;
மங்கையர்கள் போற்றிடும் சிந்தை உடையாள்;
விண்ணுலகம் காணாத பெண்மை கொண்டாள்;
வெற்றிடமும் இல்லாத குணத்தில் சிறந்தாள்

வெண்ணிலவில் ஒருகடிதம் பிறந்த நாளில்
விண்மீனின் ஆசியாக கவிதை வடிவில்
கண்மணியால் கவித்துளிகள் உன்னை வாழ்த்த
காகிதங்கள் தீர்ந்தால்என் கவியும் தீரா
விண்மதியில் எழுதினாலும் உன்னைச் சேரா
வென்பனியும் பாட்டெழுதும் உன்னை நினைத்து
தண்ணீரும் கவியெழுதும் ஓடும் நதியில்
தவமணி-யின் அகவைதின வாழ்த்து கூறி

கவிஞர் ஈ. தவணீதன், பல்லடம்

# சீவக சிந்தாமணி (இருபத்தி நான்கு)

7. கனகமாலையார் இலம்பகம் .

குறிஞ்சி யெல்லையி னீங்கி நடந்தான்
செறிந்த முல்லை நிலத்தில் சீவகன்
மறிந்து ஊதும் குழலோசை கேட்டது.
நிறைந்து விழும் அருவிகளில் நீராடினான்.

நடந்து வந்த நாடு தெரியவில்லை
கடந்து செல்லும் மனிதனைக் கேட்டான்
உடன் கிடைத்த பதில் மருதநாடு
தடம் மாறாமல் சேர்ந்தது ஏமமாபுரம்

விண்ணை முட்டும் மாட மாளிகைகள்
எண்ணி உணர்ந்தான் தலைநகரம் என்று
தண்ணீரைக் குடித்து பசி ஆற்றினான்
திண்ணியர் அவனைப் பார்த்துச் சென்றனர்



சோலையில் அயர்வாகப் படுத்து இருந்தான்
மாலையிட்ட தத்தை, குணமாலை நினைத்தான்
சோலைக்குமன்னன் மகன் வந்தான் (விசயன்)
கவலை தோய்ந்த சீவகனைக் கண்டான்

"யார் நீ? உன் பெயர் என்ன?
ஊருக்குப் புதியவனே என்ன செய்கிறாய்?
எவ்வூர்? எதற்காக இங்கு வந்தாய் ?
கூறு, உண்மையை, உன் நாடெது?"

பயமின்றி கூறியதெல்லாம் பொய்
தயங்காமல் ஊரையும் பெயரையும் மாற்றினான்
சுய கௌரவம் காற்றில் பறந்தது
நயமாகப் பேசி விசயன் நண்பனானான்

அருகில் மாமரம் மாங்கனி பார்த்தான்
விரும்பி உண்ண அம்பை எய்தினான்
இருமுறையும் விசயன் குறி தவறியது
ஒரே அம்பில் சீவகனிடம் மாங்கனி

வலிய வில்லை ஏந்திய வகை
நீண்ட அம்பை தொடுத்த வகை
அம்போடு கனி திரும்பிய வகை
எல்லாம் பார்த்து வியந்தான் விசயன்

"இப்படியான வில்லாளனை நான் கண்டிலேன் .
தப்படி பிசகாமல் அர்ச்சுனனே வந்தபடி
எப்படிப் புகழ்ந்தாலும் இவனுக்கு ஈடில்லை
அப்படியே மகிழும்படி ஏதாவது செய்யவேண்டும்"

"வில்லைப் படைத்த இறைவனே நீயாவாய்!"
அவனை மன்னனிடம் அழைதது்ச் சென்றான்
அவன் பராக்கிரமத்தை அரசனிடம் கூறினான்
மகனைப்போல மரியாதையாக நடத்தினான் தடமித்தன்
(தடமித்தன்: மன்னன்)

தொடரும்...

கவிஞர் ந. திருக்காமு

# மரங்கள்

தேவதை நுழைந்த தெருவில்
தென்றல் தஞ்சம் அடைய
திங்கள் விலகியது.

திரும்பிப் பார்க்கிறேன்
நீ வருவாய் என.

நாங்கள் இளைப்பாறும் இடம்
குப்பைகள் வீச வேண்டாம்
இப்படிக்கு மரங்கள்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# நாணுடைமை

அதிகாரம் : 102



இழிச்சொல்லுக்கு நாணுதலே
நன்மக்கள் நாணமாம்.
மனம்மொழி மெய்யொடுக்கநாணம்
பிறகுல மகளிருக்குரியவையாம்.

உணவுமுடையும் எஞ்சியவையெலாம்
எவ்வுயிர்க்கும் பொதுவானதேயாயினும்.
நன்மக்களின் சிறப்பியல்பென்பது
நாணுடைமையே யாகும்.

உயிர்களெல்லாம் ஊனுடம்பை
அகலவிரும்பா தஃதுபோல்.
நாணமாம் நற்குணங்கொண்ட
சால்பும் அஃதைவிலகாதாம்.

நாணமுடைமை சான்றோர்க்கணி
அவ்வணிகலனில்லை யாகில்.
அவரின் பெருமிதநடை
காண்போர்க்கோர் நோயாகிடும்.

பிறர்க்குநேரும் பழியை
தமக்கே நேர்ந்ததாய்க்கொண்டு.
நாணுவோரை நாணத்திற்கே
உறைவிடமாய் உலகுபோற்றும்.

நாணமெனும் வேலியை
தமக்குக் காவலாக்கிடாது.
இவ்வுலகில் வாழும்வாழ்வை
விரும்பார் மேலோர்.

நாணத்தை தம்பண்பாயுடையோர்
நாணத்தால் உயிர்விடுவர்.
உயிர்காக்கும் பொருட்டு
நாணத்தைக் கைவிடாராம்.

எல்லோராலும் நாணத்தகும்பழியை
ஒருவன் நாணாதுசெய்தால்.
அறம் அவனைநாணிக்
கைவிட்டு ஓடிப்போம்.

ஒழுக்கம் தவறுவோனுக்கு
குடிப்பெருமை யொன்றேகெடும்.
நாணமில்லா குணத்தால்
நன்மையெல்லாங் கெடும்.

நாணமில்லாமக்கள் உயிருடன்
இயங்குதல் மரப்பாவையை.
கயிறுகட்டியாட்டி உயிருடையதாய்
தோன்றக் காட்டினாற்போன்றதாம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# நான் கண்ட இரவு

கறுப்புக்குள் கருநீலம் கலவாமல்
என் காகித வண்ணங்களை திருடி,
தன் வீட்டிற்கு வர்ணம் தீட்டிக் கொண்டவள்- மதி.

மாந்தரின் குமுறல்கள் கேட்டுத் தீர்ந்ததால்,
வானிடம் கதை கேட்க ஆவலாய்
வளர்ந்து நிற்கிறது பனை.

தெருவோர ஒற்றை விளக்கில் மோதும் பூச்சிகளுக்கு,
தானே மின் குமிழாய் மாறிப் போகிறது மின்மினி.

மரங்களின் வியர்வை
அதன் உறக்கத்தைக் களவாடிடாதே என,
தொடர்ந்து வீசிக்கொண்டிருக்கிறது காற்று.

நிலவுக்கும் துணை வேண்டும் என்று,
இரவிலும் விழித்திருக்கிறது மல்லிகை.

ஆரவாரங்கள் நிம்மதியான துயிலுக்கு தடையாகிடுமோ என,
அமைதியை உடுத்திக்கொள்கின்றன இரவுகள்.

"இரவுகளில் அப்படி என்ன புனிதம்?" என்கின்றனர்,
இரவுகள் சிலரது இதயத்துடிப்பு என்பதை அறியாத கண்கள்.

கவிஞர் அதீபா ஹஸன், காத்தான்குடி

# சிதையாதே காரிகையே



பெண்மையே விழித்தெழு
பெருமையை அடைந்திடு
வீரமங்கையாய் பாரினில்
வீறுநடை போட்டிடு

வீணர்களை வீழ்த்திடு
காமுகர்களை காணின் காறியே உமிழ்ந்திடு
தன்னம்பிக்கை கொண்டிங்கு
தனித்துவம் ஆகிவிடு

எதிலும் சாதித்திடு
ஏற்றமதைக் கண்டிடு
உள்ளத்தில் உறுதியோடு
உணர்வோடு கலந்திடு

நல்லொழுக்கம் கற்றிடு
நானிலத்தில் சிறந்திடு
நயவஞ்சக வலையில்
விழுந்து விடாதே

மெய்யைக் கண்டுணர்ந்து
பொய்மையைப் பொசுக்கிடு
சிகரங்கள் காத்திருக்கு
சிதையாதே காரிகையே

வாய்ப்புகள் தேடிவருமாயின்
சமயோசிமாக ஏற்றிடு
ஊக்கத்துடன் செயலாற்றி
உன்னதத்தால் உயர்ந்திடு

கற்பைக் காத்திடு
பண்போடு வாழ்ந்திடு
கொண்டவனைத் துதித்திடு
கோபுரக்கலசமாய் மிளிர்ந்திடு

மூத்தோரை மதித்திடக்
கற்றிடு பெண்ணே
அன்பால் அரவணைத்து
அனைவரிடத்தும் புன்னகைப் பூத்திடு

ஆதரவுக் கரங்கள்
எந்நாளும் நீளட்டுமே
இதயம் மகிழ்ந்திடவே
இனிமை சேர்ப்பாயே

ஈகை உள்ளத்தில்
உவகை பிறக்கட்டும்
ஐயமில்லாமல் ஐக்கியமாகி
கருணையுடன் வாழ்ந்திடுவாயே.

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# தோள் கொடுப்போம்

தோள் கொடுப்போம்
ஏழைகளின் உயர்வுக்கு
வழிவகுப்போம்.

வழிவகுப்போம்
வாழ்வாங்கு வாழ்ந்தே
சிறந்திட வேண்டுமென்றே.

வேண்டுவதெல்லாம்
உழைப்பின் உயர்வினை
நிலைநாட்டிடவே.

நிலைநாட்டிடுவோம்
வாழ்வின் விடுதலையின்
உரிமைதனை.

உரிமைகளை மீட்டு
பாமரர்களையும் பாராளும்
மன்னர்கள் ஆக்கிடுவோம்.

ஆக்கங்கள் பல செய்திட
ஊக்கங்களுக்கே
கிரியா ஊக்கி ஆகிடுவோம்.

ஆகிடுவோம் மனிதரில்
புனிதராய் வாழ்ந்தே.

வாழ்க்கை என்பதே
ஒருமுறை அதை
வாழ்த்தட்டுமே தலைமுறை.

தலைமுறைகளுக்கும் வழிகாட்டுவோம்
முன்னேற்றப் பாதையினை.

பாதைகளை செப்பனிட்டு
வருங்காலத்தை உயர்த்திட
நாமும் தோள் கொடுப்போம்.



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# காத்திருக்கும் வறுமை

வறுமை நாளும் வாடியவனுக்கு தெரியும்
வயிறு சுருங்கினாலும் வாடும் முகம்
வசந்தம் என்பது வார்த்தை அளவில்
வழிப்போக்கன் வாங்குவதில் வாழ்வாதாரம் எங்களுக்கு
கண்ணீரோடு போராடும் கருமையான விழிகள்
சாலையோர வெயிலிலும் சாரல் மழையிலும்
வயதானாலும் குடும்பத்துக்காக வாழும் உழைப்பு
வலியோடு இருந்தாலும் வழியைத் தேடுகிறோம்.



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# பேரன்பின் பிரியம்

பிடுங்கிக் கொண்டு
போவதற்கு அல்ல
அடக்கி ஆளுகைக்கு
உட்படுத்துவதற்கு அல்ல


மிதித்து சின்னாபின்னமாக
ஆக்குவதற்கு அல்ல
அழுத்தும் புரிதலின்மையால்
அவதியுறுவதற்கு அல்ல
அந்த நேசம்.

நேசம் என்பது
பதுக்கிக் கொள்வதற்கு
பதுங்கிக் காத்திருக்கும்
மனது அதைப்
பதுக்கிக் கொள்வதற்கு

குட்டிக்குட்டி அன்பின் ஆலாபனைகளில்
குட்டிக்குட்டி அன்பின் நர்த்தனங்களில்
திளைத்தும் தீர்ந்தும்
தொலைந்து போவதற்கு

என்றென்றும் மனதோரம்
திறந்து இருக்கும்
இராட்சதப் பெட்டகத்துள்
பூட்டி வைப்பதற்கு

அங்கு துளி அன்பும் கடலாகும்
கடலன்பும் ஒரு துளியாகும்
முடிக்கவியலாத கவிதையாய்
ஊற்றெடுக்கும்
பிடிக்கவியலாத காற்றாய்க்
காதோரம் கிசுகிசுக்கும்



சிட்டிகை அளவில்
செல்லக்கோபம் கொள்ளும்
அட்டிகையாய் மாறி
கழுத்தணைத்தும் கொள்ளும்

தானாக விடுவித்துக் கொள்வதில்லை
மாறாத நேசம்
தோளில் விழுந்த கையை
எடுக்குமுன்பே
அநேக யுகங்களை
அது வாழ்ந்து விடும்!

பேரன்பின் பிரியங்களில்
இத்தனை ரோஜாக்கள்
பூத்திருக்கும் போது
பின்னரேன் நீங்கள்
அழவேண்டும்?

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# ஈ...ஈ...ஈ...ஈ!

குச்சியாய் உடலும்
குச்சிக்குச்சியாய் கைகளும் கால்களும்
வட்டமாய் மண்டை
முட்டை முட்டையாய்க் கண்கள்
துருத்திய காதுகள்
எருமையைப்போல பட்டையான பற்களுடன்
காதுவரை விரிந்த
ஈஈஈ.
என்ற எமோஜி இளிப்பு!
இப்படியாய் வரைந்து
கையொப்பமென்று
கோணல்மாணலாய்
rEgina எனக் கிறுக்குகிறாள்
தனது பெயரை!
உச்சியில்"அப்ப்ப்பா" என்று எழுதி
என் கழுத்தைக் கட்டியபடி காட்டுகிறாள்.
குறும்புச் சிரிப்புடன்
பள்ளிப் பருவம் திரும்பிவிட்ட
கவிதையே கவிதையான
என் - கல்லூரி மகள்!
செல்லமாய் அவளின் காதைத் திருகி
கன்னத்தைக் கடிக்கிறேன் மெ(வெ)ல்லமாய்!
கைகளை விரித்து
கண்களை முட்டை முட்டையாய் முழித்து
காதுகள்வரை என்
உதடுகளையும் விரித்து!
கால வாகனத்தில்
இருபதாண்டு பின்னோக்கிப் பயணிக்கிறேன் !
ஈ...ஈ...ஈ... என்றபடி-
கவிதையோடு நானும் !








கவிஞர் ரவிஜி

# வாழ்க்கை பயணம்

நான் செல்ல நினைக்கும்
இடமோ தூரம்
நாட்கள் நகர நகர
ஆசைகள் கூடிக்கொண்டே போகிறது
என் கற்பனைக்கு எல்லையில்லை
பாதை முடிந்த பிறகும்
பயணம் முடிவதில்லையே.
என்ற வரிக்கு ஈடாக
தொடரும் பயணமே.



கவிஞர் மோனிஷா, தி. மலை

# வலி

ஒருவரிடம் தோற்றுப் போகும் போதும்
ஏமாற்றப்படும் போதும் எம்மை
மதிக்காமல் நடக்கும் போதும்
மனதின் வலி என்பது
மரணத்தை விடக் கொடியது!



கவிஞர் ஜெய ஸ்ரீ, லண்டன்

# தனிமை

பொய்யான உறவுகளை
நம்பி ஏமாறுவதை விட

தனிமை
எவ்வளவோ மேலானது !?

ஏனென்றால்
இங்கு ஏமாற்றுபவர்கள் யாருமில்லை!



கவிஞர் ரா. ஜோதிமணி, தாராபுரம்

# காட்சிப் பிழைகள்

காணும் காட்சிகள் எல்லாம்
கானல் நீரின்
மாயத் தோற்றங்களாய்

நல்லவை என்னும் நலங்கள்
எல்லாம் இன்றைய நிலையில்
கெடுதலின் நிழல்களாய்

பணம் என்னும் காகிதத்தின்
குவியல்கள் ஏழ்மையின்
ஏக்க பிழைகளாய்

தோன்றும் காட்சிகள் எல்லாம்
வானவில் தோரணங்களின்
சிலநிமிட காட்சிகளாய்

தொலைந்து போன வண்ணங்களின்
சாயம் போன கிழிசல்களாய்
ஏழ்மையின் பாதை

இன்றைய வாழ்க்கை என்பது
நடுத்தர வர்க்கத்தின்
காட்சிப் பிழைகளாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

## வெறுமை

கெஞ்சி கேட்டும்
தர்மம் கிடைக்கா
பிச்சைப் பாத்திரம்
வெறுமையோடு
பார்க்கிறது
கோவில் உண்டியலை.

***

## கண்ணீர் துளிகள்

காலை தொட்டு
மாலை வரை
சில்லறைக்காக காத்திருந்த
காலியான
பிச்சைப் பாத்திரம்.
இதைக் கண்டு
மனதுடைந்த மூதாட்டி
பரிசளிக்கிறாள்
சில்லறைக்குப் பதில்
தன்கண்ணீர் துளிகளை.



கவிஞர் நாகசூடர் இந்துமதி, கூடன்குளம்

# மாமியார் மருமகள்

வையக நியதியிலோர்
இணைவுத் திருமணம்
வார்த்தைகளால்
வர்ணிக்க முடியாத நன்நாள்.

இறையளித்த இன்பப்பரிசு
இணைவுத் திருநாள்
தந்த பாசபந்தமே
மாமியார் மருமகளார்.

இனித்த பொழுதுகள்
மலர்ந்த மலராய்
மணம்வீசிய நாட்கள்
கற்கண்டுத் தகிப்பினிலே.

காலம் உருண்டுபோக
கலையாமல் நினைவுகள்
காலமெல்லாம் மறவாமல்
நிழலாய்த் தொடர்கிறது.

பெருநாள் சீட்டுக்குலுக்கலில்
மாமிவீடு மாட்டும்
நாட்களில் எதிர்பார்ப்பு
விழிகள் வீதியோடு
வழிபார்க்கும்.

அன்பின் மாமியே
என்னை விட்டு
இப்பூமியின் இதழ்கள்
மெதுவாய் விழுங்கிவிட்டது.

வடுக்கள் நிறைந்த
இளகிய கண்ணீரை
நினைக்கும் நேரமெல்லாம்
சொட்டத் தவறுவதில்லை.

மூன்றுமாதப் பிரிவில்
துடித்தழுத மரணநாள்
இன்றும் உள்ளத்தில்
உருகி வதைக்கிறது

இறைவா பண்பகழகின்
பக்குவங்கங்கள் காத்த உறவின்
ஆன்மாவின் பாவக்கறைகளை
மன்னித்துவிடு.

நாளை மறுமையில்
உயர்ந்த சுவர்க்கத்தை
அனந்தரம் கொள்ள
உன்அருளால் அணைத்துக்கொள்.

கவிஞர் சேஹு மொஹம்மது பெனாஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ, மதவாச்சி

# என்சுந்தரப் புருசா!

தண்ணிலவு தேனிறைக்க
தாழைமரம் நீர்தெளிக்க
தண்ணிலவு தேனிறைக்க
தாழைமரம் நீர்தெளிக்க

நேசத்தைத் தூதுவிட்ட
என்னாசை மச்சானே!
ஏக்கமாய் நானிருக்க
எங்கே போனாய்?

பாதக்கொலுசு சொல்லும்
பட்டாம்பூச்சிப் படபடப்பு!
மீசை முறுக்கழகா
மீனாட்சி சொக்கனழகா!

ஆசைப் பூங்குயில
அலுங்காம குலுங்காம
அள்ளி அணைச்சு
கொஞ்சி முத்தமிட

வாசலில் போட்டுவச்சு
வக்கணையா சேதிசொல்லும்
சித்திரச் சுழிப்பது
நித்திரை கலைக்களையா?

சுருக்கா சொல்லேன்
என்சுந்தரப் புருசா!



கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

# வாசிப்பை நேசி



வாசிப்பை நேசி
உன் சுவாசிப்பேயதுதான்
யோசிப்பையளிக்கும்
நல்ல தேன் எண்ணம் அருளும்

பல்பனுவல் படிப்பதனை
பலகாரம் உண்பதாகத் தினமெண்ணிச்சுவை
கொண்டர் முன்பெரும் அறிஞர்கள்

கலிலியாய் இருந்தவனோ
நியூட்டனாய் பிறந்தவனோ
பேக்மனாய் வளர்ந்தவனோ
யாவரும் காதலர்களே வாசிப்பின்

உன் மூளையுள்ளே
கிடத்திருக்கும் நூற்றுப்பலசெல்கள்
வேலை ஒன்று செய்கைக்கு
வாசி தினமும் வாசி

நிறம் கொண்டபட்சி ஒன்றாய்
வானமெல்லாம் வட்டமடிக்க
உள்ள பல நல்பனுவல்
தனை தினம் படி

நேசித்து வாசித்து
போசித்த வாழ்வு
பெற்று விமோசித்த
மாண்பு கொண்டு
வெற்றிநடை போடுவோமாக

மாற்றமுள்ள திருநாளை
வீறு கொண்டு பெற்று
தேகம் எங்கும்
கல்வி பெற்று மிளிர்வோமாக
வாசி மனிதா வாசி.

கவிஞர் எஸ். எம். எம். அமீர், கல்முனை, இலங்கை

# பிளவு மனம்

பிளவு மனம் புலம்பி தள்ள
களவு மனம் நலவறிந்து மௌனம் சுமக்க
தெரியா நிலமை மாற்றத்தில்
எண்ணவோ இருக்குமென
சிடுசிடுபெல்லாம் ஒதுங்கி போக.

நீ இங்கெங்கேனும் இருந்து விடுவாயோ என
எண்ணவோட்டம் உன் நியாபகத்தை
அள்ளி போட்டுக்கொண்டு எள்ளி நகையாட
கள்ளி மனம் சிணுங்கி தொலைய.

வெளை மனதில் குருதி சுற்றோட்ட நிறுத்தமாய்
ஏகாந்த ஏக்க பெருமூச்சு சூடேறி வெளியேற.

அத்தனை சீற்றத்திலும்
சுற்றோட்ட சுடர் நீயாகி
எனேனை மாய்க்கும் மன ஓட்டம்.

திறந்தவெளியில் மனம் திறந்து தேடலாக்குகையில்
தெரியா உன்னை தேடி மீளப்பெறும் ஏமாற்றத்தில்
என்ன திட்டமிடுகிறாய் நீயென
இறைவனை நினைத்து
அவனோடு மனக்குமறல் வேதனையாய் கரையும் வேளை.

கண்ணுக்கெட்டா ஏதொன்று வந்து மனந்தொட்டு
பொறுத்திருவென சொல்லும் வேளைகள்
பொறுமை சூடீம் மனநிலையில் புலம்பல்
ஓய்ந்தொதிங்கிடும்.



கவிஞர் சஹீனாஸ் பேகம், முதலைப்பாளி, புத்தளம்

# தீட்டாத ஓவியம்

அகவை ஐந்தில்
அகன்றுவிட்ட ஆருயிரே.
அல்பகல் ஆயிரம்
அடியெடுத்து வைத்தாலும்
அலுங்காமல் கடக்கிறது
அறிவில் தேடலை.
தந்தையின் இழப்பு
திகட்டா வண்ணம்
ஒற்றை ஆணியில்
ஓய்வில்லாமல் சுழன்று
ஆழமாய் பதிந்து
ஆழ்கடலில் நுழைந்து
அச்சாணியாய் மறைந்தாயே.
அச்சத்தை துறந்தாயே.
காவியத்தின் சாயலை
தூரிகையாய் தூவி
நிலையான ஓவியமாய்
நிலைநிறுத்திய தெய்வமே
அம்மா வாசகத்தின்
அம்மாவாசை பொலிபெற
மீண்டும் ஜெனிப்பாயே
மழலையாய் தவழ்வாயே.





கவிஞர் ஏ. தேவராஜ், சென்னை

நீ உனக்கே தெரியாமல் என்னை பார்த்த
அந்த எதார்த்தமான ஒரு நொடி பார்வைக்கே
அந்த காதலும் என்னை காதலித்தது என்றால்
நீ உனக்குத் தெரிந்தே என்னை பார்த்திருந்தால்
நான்?



கவிஞர் இரா. சங்கர், ஈரோடு

# இள(று)கும் இதயம்



வெளியுலகை காணாது
அடிமைப்பட்டு கிடந்தாலும்
சிலவர்களின் பேச்சுக்கள்
இதயத்தை கொன்றாலும்
அவனியை சுற்றாத
அவளின் கண்களும்
அவள் இதயத்தில்
அத்தனை காயங்களும்
கயிற்றால் முடிச்சு
போட்டுக் கிடந்தாலும்
அவளின் மௌனமான
வார்த்தைகள் அணைந்தாலும்
அவளின் இறுகிய
இதயமும் இளகிடும்
அவனின் கனிந்த
முத்தான வார்த்தைகளால்

கவிஞர் முஹம்மட் றாபி ஷேபா கானம், இலங்கை

# தமிழின் தாசன்


புதுவையில் தோன்றிய பாரதி நேசனே
புதுமை புரிந்த பாரதி தாசனே
பெண்களின் கல்விக்கு நீயே ஈசனே
தமிழ்ப் பெயரை பிள்ளைக்குச் சூட்டவைத்தார்
பழம்பெருமை பேசியே வளர்ச்சி குறைக்காதீர்
அரும்படங்களோடு பொருளெழுதி வளம் சேர்ப்பீரென
இளைய தலைமுறைக்கு ஆத்திச்சூடி தந்தார்
குயில் பாட்டும் தமிழாக வேண்டினார்
கொடிமுல்லையில் தமிழ் மணம் கமழ்ந்தது
பாண்டியன் பரிசு தமிழின் முரசு
குடும்ப விளக்கு தமிழன்னைக்கு ஒளிவிளக்கு
தாயை எவர் பழித்தாலும் விடாதே
தமிழை இழித்தவரை தாயே தடுத்தாலும்
உமிழ்ந்து விடாமல் வந்து விடாதேயென
அமிழ்தாய் எண்ணிப் போற்றினார் தமிழை
தமிழன்னை பாரதிதாசனால் பெற்றிட்டாள்
மறுமலர்ச்சி.



கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்


# ஆசை

ஆசை என்னும் கனலை
முயற்சி கங்களித்து,
ஆர்வம் கொண்டு விசிறி விட,
அனலை அணையாமல் ஓம்ப
ஆசைகள் கையகப்படும்; நிச்சயமாக.
நிராசையாகது; எந்நாளும்.



கவிஞர் சசிகலா விஸ்வநாதன், பெங்களூரு

# பேரழகி இவள்



அந்த அருவியின்
பேச்சு சத்தத்தில்
அகல மறுத்த மனத்தடம்
ஆசை தழுவலில்
சிந்தனை பின்னல்களை
தள்ளிவைத்தது

வழித்தடம்
பற்றிய நீர்மணிகளின்
குதியாட்டத்தில்
தாளாத ராகத்தில் தள்ளாடும்
போதையில்
துள்ளியெழும் எண்ணங்கள்
போகுதே

பேச்சு மறந்து
பெரும் நிம்மதி சூடிய
உறைவிடமாகி
கனவிலே மிதக்கும்
விழிமணிகள் சிந்திய
தோற்றமயக்கத்தில்

சொல்லாத சேதிகளின்
சொல்லாடல் ரகசியத்தை
சொன்னதே
அந்த பேரருவி பெரும் சத்தமாய்

கலைத்து விடாத
காரிகையிவளோ
கண்ணிமை ததும்பும்
கன்னியிவளோ
தலை தடவி செல்லும்
அருவி மகள்

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# அன்னை பூமி இந்தியா

வேற்றுமையிலும் ஒற்றுமை கண்டு
அமைதி பூங்காவென
அகிலத்திற்கே வழிகாட்டும்
அன்னை பூமி இந்தியா.

மதச் சண்டை இனச் சண்டை
மாச்சரியங்கள் இல்லாத
சகோதரத்துவம் போற்றும்
அற்புதத்தின் அடையாளம்
அன்னை பூமி இந்தியா.

தேசிய உணர்வும் தெய்வீக சிந்தனைகளும்
பார்க்கும் விழி போலே
உயிரும் உணர்வும் கொண்டு
வாழ்ந்திடும் மக்களின் வீடே பாரதம்.

வாழும் வீட்டில் நுழைந்திட்ட
விஷப்பாம்புகளாம் தீவிரவாதம்
அண்டை நாட்டின் சதி என
அமைதி குலைத்திடவே
சதி வேலை தினம் தினம்.

பயிரை அழிக்கும் களைகளை
வேரோடு வீழ்த்திடும் அந்த நாளே
பாரதத் தாயின் புன்னகை பூக்கும்
திருநாளாம்.

அமைதி பூங்கா இந்தியா
அகிலத்திற்கே வழிகாட்டும்
*அன்பு தேசம்* என்பதும்
சதியாளர்களை அழித்திட
*புயலான* நடவடிக்கை
காலத்தின் கட்டாயம்.



கவிஞர் ஜேப்பி@பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

தனி தனி
தடமாக இருந்தாலும்
நாம் இணைவதலே
அவர்களின் பயணம்
நீள்கிறது,
நீயும் நானும் வேறல்ல
ஒன்றன் பின் ஒன்றாக
இணைந்து
வெற்றி பாதையை
பறைச்சற்றுக்கிறோம்.



கவிஞர் கார்த்திகா, கோயம்புத்தூர்

# கண் கண்ட தெய்வம்

நடமாடும் தெய்வம் நம் தாயே!
நம்மை படைத்த ஆண்டவன் நேரில் வரமாட்டானே,
தேவைகள் ஆயிரம் இருந்திடனும்
தேவைகளை பூர்த்தி செய்யும் வரப்பிரசாதி!
நம்மில் கலந்து கசிந்துருகி கருணை காட்டும் ஜீவன்!
தான் பசித்திருக்க நம் பசித் தீர்ப்பவள்.
தன் ரத்தத்தையே பாலாக்கி ஊட்டியவள்!
கருணையே வடிவான பேசும் தெய்வம்.
நம்மை பேணி வளர்த்தும்,
மே தினில் புகழ் பெற பாடுபட்டு வரும் ஜீவன்.
'அன்பில் விளைந்த ஆரமுதே'
என்றே நம்மை உச்சி குளிர

முகர்வாளே!
பக்தனுக்கு கடவுள் கண்கண்ட தெய்வம்.
அள்ளிக் கொடுக்கும் தொழிலாளிக்கு
முதலாளி கண்கண்ட தெய்வம்.
சிஷ்யனுக்கு குரு கண்கண்ட தெய்வம்.
நம் அனைவருக்கும் அன்னையே
கண்கண்ட தெய்வம்.



கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# என்னுயிர்க் காதலே

எங்கேயோ பிறத்ததோமே
எங்கேயோ வாழ்ந்தோமே
வெவ்வேறு தாய் வயிற்றில் பிறந்தோமே


வைத்தியசாலையிலே
எதிர்பாரா சந்திப்பாய் நம் சந்திப்பு நடந்ததே.
செல்லுமிடமெல்லாம் ஒன்றாய் சென்றோமே.
உன்கைபற்றியே நானும் சென்றேனே.
உன் நினைப்பில் நானும் வாழ்ந்தேனே.

முதல்நாள் சந்திப்பு
கடற்கரையில் நாம் பேசிய வார்த்தைகள்.
காரில் நாம் பயணித்த நொடிப்பொழுதுகள்.

கடற்கரையில் எடுத்தபுகைப்படங்கள்.
அனைத்தும் நினைவுகளாய்.
இரண்டாம் தடவை நான் உனைப்பார்க்க
ஏங்கியவுடன் நானும் நீயும் புதுக்காரில்
புதிதாய் பயணத்தை தொடர்ந்தோமே

நாளும் செல்ல வைத்தியசாலையிலே
உனை நான் பார்க்க காத்திருந்து
உனைப்பார்த்து இரசித்தேனே.
நீயும் எனை இரசித்தாயே இரசித்தாயே.
எனக்காக உன்நிமிடத்தை செலவழித்ததை மறப்பேனா.

எனை நீ தம்பியாய் ஏற்காயோ அண்ணா
நீயென் உலகம் அண்ணா
என் உயிரும் நீஅண்ணா
என்மனதை புரிந்துகொள்வாயோ.
விதியதை மாற்றுவாயோ.



கவிஞர் இ. தேவர்மன், இலங்கை

# கண்ணாமூச்சி

காரணமேயின்றி
புன்னகைக்கு
எதிர் புன்னகைக்கும்
மழலை நமக்குள்
ஒளிந்து விளையாடுகிறது
உங்களை மீட்டெடுக்க
சீக்கிரம் கண்டுபிடியுங்கள்
மற்றவருடன்
மகிழ மட்டுமே
தெரிந்த மனிதத்துடன்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# நம்பிக்கை

யாவரும் நமக்கானவர் அல்ல
நாமே என்றும் வீழ்ந்து எழுவோம்
இல்லையேல் எம்மை பலர்
பலம் அறிந்தே மனதில் வாஞ்சனையோடு.
போற்றுவர் தூற்றுவர் தூற்றுவர் போற்றுவர்
உனக்கானதை நீயே தேடி பழகிட
உனக்காக நீயே வெற்றி நடை போடு
நாளை என்ற நாள் மட்டுமே உனக்கானது
உன்னை வீழ்த்த யார் உண்டு பூமியிலே
நம்பிக்கையோடு எழுந்திடு மானிடா
நீயே என்றும் உன் பலம்.



கவிஞர் முர்ஷிதா, அக்குறணை

# தீவிரவாதத்தை வேரறுத்தல் வேண்டும்!



ஏப்ரல் இருபத்து இரண்டாம் நாளன்று
இப்படியொரு நிகழ்வு உலுக்கியது நமையெல்லாம்!
அப்பாவி சுற்றுலாப் பயணிகளின் மீதங்கே
துப்பாக்கிச் சூடா? மதத்தின் பேரால்
மனிதத் தன்மையற்ற தீவிரவாதத் தாக்குதல்!
தப்பி வந்தவர்கள் கூறுவதைக் கேட்கையிலே
கப்பியது சோகம்! அன்பென்பதே சிறிதும்
இல்லாத இதயங்கள்! கனவுகள் பலசுமந்து
களிப்படைய வந்தவர்களை கணநேரத்தில் சூழ்ந்து
அழித்தது அநியாயம்! இருபத்தாறு இன்னுயிர்கள்
வீழ்ந்தன அங்கே! அழகான நிலப்பகுதி
தீவிர வாதத்தால் திகில் நிலமானதுவே!
ஏனிந்தக் கொடுமை? எதற்கிந்த மதவெறி?
வெறுப்பை விதைத்தால் அழிவொன்றே விளையும்!
பல்வகை மலர்கள் நிறைந்திருக்கும் மலர்வனத்தில்!
எல்லோரும் இவ்வுலகின் சிறுபிள்ளைகள் என்றுணர்ந்தால்
அன்பு மலர்ந்து அரணாகும்! மலர்ந்திடும்
மனிதநேயம்! மகனைப் பறிகொடுத்த தாயின் கண்ணீர்,
கணவனைப் பறிகொடுத்த பெண்களின் கண்ணீர்
கல்நெஞ்சங்களைக் கரைக்கட்டும்! எண்ணங்களை மாற்றட்டும்!
வெடிக்கும் சத்தமும், வீறிடும் அழுகையும்
முடிவுக்கு வந்திட வீழட்டும் தீவிரவாதம்!
மனிதம் தழைப்பதை,, இயல்பாய் மகிழ்வுடன்
மனிதர்கள் வாழ்வதை, மாறிய சூழலை
இனியேனும் பார்க்கட்டும் மலைகளும் நிலவும்!
தீவிரவாதத்தை வேரறுத்து பாரதம் சிறக்கட்டும்!

கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரி

# வருகை

வெப்பத்தின் ஆதிக்கம்
வியர்வையின் ஊற்று
ஆதவன் வருகை



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி



அகர முதல

# அதுவல்ல இது

நெருங்கிய
எதிர்பாரா மரணம் நிகழ்ந்தபின்
துக்கம் தொண்டையை
அடைக்கையிலும்
சிந்தனை வேறு இடம் நோக்கி
நகர மறுக்கையிலும்
இருப்பவர்களுக்கான
வாழ்க்கைக்கு பயணப்படுவதும்

மிக நீண்ட
முயற்சிகளுக்கு பின்னான
தோல்வியில்
மாற்று வழியில்
முயல்வதும் இல்லை
வேறு இலக்குகள் கொள்வதும்

முன் கோபமும்
வார்த்தைக்கு வார்த்தை
எதிர்வாதம் செய்து
உடலையும் மனதையும்
சங்கடப்படுத்திக் கொண்ட
காலம்போய்
சரி சரி
அவர்களின் புரிதல் அவ்வளவுதான்
என பொறுமை காப்பதும்
இயலவில்லை எனில்
இடம் நகர்தலும்



சின்ன வெற்றிக்குக்கு கூட
கூச்சலிட்டு ஆர்ப்பாட்டம் செய்த
காலம் போய்
வெற்றியை மனதுக்குள்ளேயே
அனுபவித்து செய்ய வேண்டிய
அடுத்த கட்டப்பணிக்கு
நகர்வதுமான

பயணத்துக்கான காலம்
நிச்சயம்தேவை
இவை நடைபெற்றபின்
சொல்லப்படுவது
காலம் எல்லாத்தையும்
மாற்றும்

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

# காதல் இல்லாக் காதல் ஹைக்கூக்கள்



எந்த வேலையாயினும்
நாளை வேண்டாம்
அவளுடன் இருப்பேன்
*

வாழும் முறைகளுக்கு
புத்தகம் வேண்டாம்
உன்னைப் படிக்கிறேன்
*

தேக தாகம் தீர்ந்து
வார்த்தைப் பசி எழுகிறது
உன்னைக் கண்டதும்
*

எப்படி உறங்க வைக்க
மனக் குழந்தையை
உன் குரல் கேட்காதபோது
*

நேரவீணடிப்பின் வெப்பம் கொதிக்க
பார்வைக்கெஞ்சலோடு வருவாய்
முத்த மழை பொழிய
*

ஒவ்வொரு இதழிலும் நீ
உதிரவிடுவதில்லை நான்
ஒற்றைரோஜாவை
*

எத்தனை தவங்கள்
வார்த்தை வரம் விழ
உன்னிடம் வேண்ட.
*

வெடிக்கும் இமைகளுக்குள்
வெந்துபோன என் மனதை
முத்தத்தால் சாம்பலாக்கு
*

வானம் தொடுவேனா
பூமிக்குள் புதைவேனா
நீ திசை காட்டு
*

வெட்கம் விடுத்து
வெளியே வாவென்கையில்
வெட்கத்தில் மறுக்கிறாய்

கவிஞர் இளையவன் சிவா

இயல்பாய் நடப்பதை
யாரோ இயக்கியவாறு எழுதுங்கள்
கவிதை பிறக்கும்
***

பல லட்ச கதாபாத்திரங்கள்
வாழ்ந்து மாய்ந்த இடம்
வீணாய் போன
தொலைக்காட்சி பெட்டி
***

கைக்கெட்டும் கனிகள்
குழந்தைக்கானவை.
உச்சியில் உள்ளதை
பறித்து உண்
***

விளைநிலத்தை அழிக்க நினைத்த என்னை
ஏசும் முன்
கருவேலம் விளைந்ததை கூற விடுங்கள்
***

சொல்லில் அடங்காத
ஒரே விஷயம்
செயல்
***

முயற்சிகளை கைவிடும் முன்
வானக வாகனத்தை பார்
முடிவிலா முயற்சியின் முக்கிய பரிசு அது
***

பேனாக்களை
பரிசளிக்கும் பழக்கம்
அழிந்து வருகிறது
***



வாசி
யோசி
நேசி
சாவு
***

பிறர்பெருமை கொண்ட
அனைத்திலும்
சிறு பொறாமை இருக்கும்
***

தோசை ஊத்தவாடா என்றொரு குரல்
இன்றைய பொழுதிற்கு இது போதும்

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

தீபக், வசாய் ரோட்டில் ஸ்டேசன் அருகே ஒரு கோழிக்கடையும் ஒரு சிறிய பான் மசாலா கடையும் வத்திருப்பவன். தமிழரசுவிற்கு சிறு வயதிலிருந்தே பழக்கமானவன். அவனுடைய பான் கடையும் அவனுடன் மராத்தி பேசுவதற்கும் தமிழரசுக்கு மிக மகிழ்ச்சியாக இருக்கும். அவ்வளவு அழகாக இலக்கணம் கலந்து மராத்தி பேசும் தீபக் சிவ்டே, அரசு சொல்லும் தமிழின் மகத்துவத்தைக் கேட்டு மிகுந்த நல்ல சொற்கள் உள்ள பைந்தமிழ் என்று தமிழைப் பாராட்டக் கூடியவன்.



அரசு முதலில் 'தீபக்கிடம் சொல்லலாமா?' என்று யோசித்தான். கண்டிப்பாக இவனும் போய் உன் தந்தையின் வியாபாரத்தைக் கவனி, இப்படி இளமையையும் நேரத்தையும் வீணாக்காதே என்றுதான் அறிவுரை சொல்ல போகிறான். இவனிடம் என்ன சொல்வது என்று நினைத்தப் போது "என்ன? எப்போதும் வெளிநாட்டு பிராண்ட் சிகரெட் வைத்திருப்பாய், ஒரு சிகரெட் தரக் கூடாதா?" என்று தீபக் கேட்டப்போதுதான் தான் இன்று முழுவதும் சிகரெட் பிடிக்க வில்லை என்பதை உணர்ந்தான்.

சுதாரித்துக் கொண்டு, "ஸாரி தீபக் சிகரெட்டை விட்டு விட்டேன்" என்றவன் "உன் வியாபாரம் எப்படி இருக்கிறது?" என்று கேட்டான்.

"அது ஓடிக்கொண்டிருக்கிறது. வா சாயா குடிக்கலாம்." என்றான். 'இவனுக்கு நான் சாயா வாங்கித் தர முடியாத நிலையில் எப்படி இவனோடு நான் டீ குடிக்க போவது... மறுத்து விடலாமா? ' என்று யோசித்தப்போது "என்ன முழிக்கிறாய், என்ன பர்சை எடுத்து கொண்டு வர மறந்து விட்டாயா? சரி, பராவாயில்லை நான் வாங்கித்தருகிறேன்" என்று அரசுவை இழுத்துக் கொண்டு சென்றான்.

சூடாக தேநீர் உள்ளே சென்றதும் கொஞ்சம் தெம்பு வந்தது. "ம்...தீபக்...உன்னிடம் கேட்பது .." என்று இழுத்தான் அரசு.

"என்ன சொல்லு?", "எனக்கு ஆயிரம் ரூபாய் வேண்டும். திருப்பித் தந்து விடுவேன். ஆனால் திரும்பத் தர கொஞ்ச நாளாகும்.

யோசனை பலமாக இருக்கிறது?

அத்தியாயம்-8

புதினம்

''க்யா... அரசு...விளையாடுகிறாயா? உன் வீட்டில் இல்லாத பணமா?'' சிரித்தான் தீபக். ''வீட்டில் பணம் இருக்கட்டும். நீ எனக்கு கொஞ்ச நாளைக்கு கைமாற்றாக தரமுடியுமா? நான் சம்பாதித்தவுடன் திருப்பித் தந்து விடுகிறேன்.''

''என்னது நீ சம்பாதித்து தரப்போகிறாயா? என்னாச்சு அரசு. ஏதாவது பிரச்சினையா?'' தீபக் பையிலிருந்து எடுத்து அறுநூறு ரூபாய் இருக்கிறது போதுமா?'' என்று கேட்டான். வாங்கிக் கொண்டு ''மிக்க நன்றி தீபக்'' என்று எழுந்தான்.
''என்ன அரசு எனக்கு நன்றி சொல்கிறாய். என்னிடம் கடன் வாங்குகிறாய். என்ன விஷயம்?'', ''அப்புறமாகச் சொல்கிறேனே?'', ''இரு, வீட்டிலே ஏதாவது சண்டைப் போட்டுக்கொண்டு வந்தாயா அரசு?''

''சண்டை ஏதுமில்லை. நான் அடிக்கடி நமக்குள் பேசிக்கொள்ளும் போது சொல்வேனே, என் காலில் நிற்க முயற்சி செய்து வீட்டை விட்டு வெளியே வந்து விட்டேன்.'', ''உனக்கு சரியாகத் தெரிகிறதா?''
''ஏன் அப்படிக் கேட்கிறாய்?'', ''உன் தந்தைக்கு நீ ஒரே மகன். அவர் உழைத்து சம்பாதித்து சேர்த்து வைத்திருக்கும் இந்த பிஸினஸ் உலகமே உனக்காகத்தான். அதை பகிர்ந்து கொள்ளக்கூட உன் வீட்டில் அண்ணன், தங்கைகள் யாரும் கிடையாது. இந்த நிலையில் அவர்களை நீ தனியாக விட்டு விட்டு வெளியேறியது எனக்குச் சரியாகத் தெரியவில்லை.''

''அதற்காக நான்.... தனியாக நின்று என் சுய சம்பாத்தியத்தில் முன்னேற நினைப்பது தவறா? என் அப்பாவிற்கு யாராவது சேர்த்து வைத்தார்களா? அவர் இந்த அளவிற்கு இந்த மும்பையின் அசைவில் பங்கு கொள்ள வில்லையா? அவரால் முடியும் போது ஏன் என்னால் முடியாதென்று நினைக்கிறாய்?''

''அரசு பேசுவது எளிது. உன் தந்தையின் வளர்ப்பு முறை.. நீ பிறந்து வளர்ந்த முறை...இடையே எத்தனை வித்தியாசங்கள்?. அவர் மனதில் தீப்பிழம்போடு பணம்...பணம்.. என சம்பாதிக்க ஆரம்பித்தவர். அவருக்கு அன்று கண் முன்னால் வியாபாரக் குதிரையின் கடிவாளம் தவிர எதுவும் தெரியவில்லை. ஆனால் உன் நிலை... உன் கொள்கையை நான் மறுக்க வில்லை, நீ விரும்பினால் கார், எந்தப் பக்கம் தொட்டாலும் பணம். ... என்ற நிலையில் வளர்ந்தவன். உன்னால்... சரி..விடு, உன்னை நான் நோகடிக்க விரும்ப வில்லை. நீ வீடு போக விரும்ப வில்லை என்றால் என்னோடு தங்கலாம். எனது சொப்டா(குடிசை)யில் உனக்கு எப்போதும் இடமுண்டு.

கவிஞர் இரஜகை நிலவன்

நான் சாப்பிடும் சப்பாத்தியும் சப்ஜியும் உனக்குத் த்ருகிறேன்."

"ஸாரி... தீபக். வசாயிலிருந்து கொண்டு நான் வீடு போகவில்லை என்றால் என் அப்பாவின் பெயர் கெட்டுப் போவிடும். நான் தாராவிக்குப் போய் நண்பர்கள் மூலம் அல்லது சுன்னாபட்டியிலிருக்கும் கஸின் பிரதர் மூலம் ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்கிறேன்."

"உன் விருப்பம்.", "வரட்டுமா?"

"இரு அரசு,இந்த முகவரியை வைத்துக் கொள். என் அண்ணாவின் மாமனார் பையன் ஒருவன் நம்ம காந்திவிலி பொய்சரில் பி.இ.எஸ்.டி.(பெஸ்ட்) பஸ் ஸ்டாப்புக்கு அடுத்தாற்போல ஒரு சின்ன தொழிற்சாலை வைத்திருக்கிறான். பெயர் திலக். கோழி தீவனம் தயாரித்து எக்ஸ்போர்ட் பண்ணுகிறான். போய்ப் பார்த்து பேசிப் பார்." என்று ஒரு விசிட்டிங் கார்டைநீட்டினான்.
"சரி, இருக்கட்டும்." எனக் கிளம்பியவனை மராத்தியில் திரும்பவும் அழைத்து "அரசு தீர்மானித்து விட்டாயா? " கேட்டான் என்று தீபக் சிவ்டே.

"மாற்றமில்லை தீபக்.", "பெஸ்ட் ஆஃப் லக்." கையைக் குலுக்கி அனுப்பி வைத்தான்.




தொடரும்...

# பறவைகள் எழுதிய வானம்



அ செல்வராஜ்
வெளியீடு இயக்கி பதிப்பகம் சென்னை
முதல் பதிப்பு ஏப்ரல் 2025
பக்கம் 124 ; விலை ரூபாய் 120

முழுக்க முழுக்க இயற்கையின் மீதான காதலும் பறவைகளின் மீதான நேசமும் கொண்டு நூல் முழுக்க வரையப்பட்டிருக்கிறது சிறகுகளின் எண்ணங்கள்.




அன்னை மடியில் தவழ்ந்த உயிரினங்கள் அனைத்தும் பூமித்தாயின் மடியில் வாழ்வை நடத்திக் கொண்டிருக்கும் காலச் சூழலில் இயற்கையும் இயற்கை சார்ந்த பொருட்களும் நமக்கான வாழ்வை விரியச் செய்கின்றன. இயற்கையை போற்றிப் பாதுகாக்காத மனித இனம் தனது பேராசையினாலும் நீளும் கொடுங்கரத்தினாலும் சிதைத்து கொண்டே வந்து இயற்கையை அழித்துக் கொண்டே நகர்ந்து கொண்டிருக்கிறது. தனக்கான புதைகுழியைத் தானே தோண்டி அதை நோக்கிப் பயணம் நடத்தும் மனிதனுக்கு தவறுகள் என்ன என்பதை உணர்வதற்கும் நேரமில்லை. அதை சரி செய்து உலகத்தை சீர்படுத்தவும் யோசனை இல்லை.

வெறுமனே அசோகர் மரங்களை நட்டார் என்று பாடத்தில் படித்து மதிப்பெண்களுக்காக மறந்து விடும் சமுதாயத்தை உருவாக்கிக் கொண்டிருக்கும் நாம் இன்றைய தலைமுறைக்கு எதைக் கற்றுக் கொடுத்திருக்கிறோம் என்பதை சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். பொருளாதாரமும் வசதிகளும் மட்டுமே சிறப்பானதொரு வாழ்க்கையை கட்டமைக்கும் என்ற பொய் பிம்பத்தை ஒவ்வொரு சிறு பிள்ளைக்கும் கற்றுக் கொடுக்கும் இன்றைய கல்விமுறையில் இயற்கையை நேசிப்பதற்கும் பறவைகளை வாழ்விப்பதற்கும் எந்த ஒரு இலக்கணமும் வகுக்கப்படவில்லை.

கவிஞர் இளையவன் சிவா

தன்னை முற்றிலுமாக இயற்கையின்பால் ஒப்படைத்து மகிழும் மனம் உடையோருக்கு வனமும் வனம் சார்ந்த உயிர்களும் பறவைகளும் அவற்றின் சிறகுகளும் காணாமல் போவதை கண்டுகொண்டு கண்ணீர் விட்டு அழுவதோடு நின்றுவிட மனம் வருவதில்லை.எப்பாடுபட்டாவது இயற்கையின் மீதான கரிசனத்தை இனிவரும் தலைமுறைகளாவது தெரிந்து கொண்டும் புரிந்து கொண்டும் தமது வாழ்வியலை மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற பேராசை பிறந்து விடுகிறது.

கட்டளையிட்டு சட்டம் இயற்றி ஏவல் பணித்து என மனித மனத்தை அசைத்து விடக்கூடும் என்ற சிந்தனைகள் எப்போதும் நிறைவேறப் போவதில்லை. புத்தனோ காந்தியோ போதி மரமோ போதித்த போதும் அவரவர் சிந்தனைகளுக்குள் மனசாட்சி பேசாத வரை இயற்கையைப் பற்றிய எண்ணமும் அதை பாதுகாக்க வேண்டும் என்ற கருத்தும் மனிதனுக்குள் பிறக்கப் போவதில்லை. ஆயினும் சும்மா இருந்து விடுமா இயற்கையை நேசிக்கின்ற மனம்?

தன்னை உணர்ந்து கொண்ட ஒவ்வொரு உயிருக்கும் தனது பெற்றோர்களே சிறந்த கடவுள்களாக மாறிவிடுவார்கள். அந்த வகையில் கோவிலுக்குச் செல்லாத மனம் அப்பாவின் அருமையை இப்படித்தான் எழுதி வைக்கும்.

"இப்போது கோவிலுக்கு செல்கிறேன்
ஆம்
அப்பா என்ற கடவுள் இல்லாததால்"

துன்பத்தில் துவண்டு விடுகிறது மனம். தோல்வியில் சரிந்து விடுகிறது அவரவர் குணம். வெற்றி வந்தால் கொண்டாடுவதும் பின்னடைவில் தனக்குள்ளே புதைந்து போவதும் என உருமாறிக் கொண்டிருக்கும் மனித மனத்திற்கு மிகப்பெரிய ஆற்றலை, சக்தியை காய்ந்த சருகும் கூட வழங்கக்கூடும்.

"காய்ந்துபோன
புற்கள் கூட
வானம் பார்த்தே
புன்னகைக்கும்"

ஒவ்வொரு மனிதர்களும் ஏதோ ஒன்றைத் தேடிக் கொண்டே இருக்கிறார்கள். பணத்தை, மனதை, வாழ்வை என அவரவர் மனங்களுக்குள் ஆயிரம் எண்ணங்கள் தேடுதலைத் தொடருகின்ற சூழலில் அகத்தேடல் என்பது முழுமையுற்றால் அவரவருக்குள் உருவாகும் வெளிச்சத்தை உணர்ந்து கொண்டால் எப்போதும் உயரமாகவே வானம் என விரிய முடியும்.

கவிஞர் இளையவன் சிவா

"தேடல் யாதெனில்...

யாதொன்றும் அறியா
உன் மௌனத்தின் வெளிச்சத்தில்
உன்னை வெளிச்சமாக்கிக் கொள்வதாகும்.

யாதொன்றும்
அதிர்ந்து போவதாக இருக்கட்டும்
நீ அமரும் சிம்மாசனம்." வனங்களின் பசுமையைத் தொலைத்து விட்டு கிளைகளையும் இழந்து எதிர்காலத்தைக் கட்டமைக்க போராடிக் கொண்டிருக்கும் பறவைகளுக்கு தேடினாலும் தென்பட போவதில்லை நிலங்கள் என்ற நிகழ்காலத்தை முகத்தில் அறைகிறது இந்த கவிதை.

"விவசாய நிலங்கள்
அனைத்தும்
அழித்துக் கட்டிய
கான்கிரீட் வீடுகள் அனைத்தும்
கல்லறைத் தோட்டங்களாகவே தெரிகிறது
காடுகள் கடத்தப்பட்ட பறவைகளுக்கு." வான் அமிர்தம் என்று வள்ளுவரால் போற்றப்பட்ட மழை எல்லா உயிர்களுக்கும் ஆதித்தாயாகி பாலூட்டிக் கொண்டே இருக்கிறது. மழையின் கருணையே வாழ்வின் நகர்வை அழைத்துச் செல்கிறது. மழையின் நீட்சியே உயிரின் பயணத்திற்கு உறுதுணை செய்கிறது. விவசாயத்தில் கடவுளாகிப் போன மழை எல்லோருக்கும் வழிகாட்டும் பாதையாக மாறிவிடுகையில் காணும் மனமெங்கும் குளிர்ச்சியும் பசுமையும் பொங்கி வழிகிறது

"தைப்பொங்கல் ...

மனைவிக்கு பட்டுப்புடவையும்
குழந்தைகளுக்கு புத்தாடையும் உடன் பிறந்தவளுக்கு
மஞ்சள் வண்ண சேலையோடு பொங்கல் சீர்வரிசையும்
செய்ய முடிந்தது
வறண்ட பூமிக்கு
பச்சை வண்ண பட்டாடை உடுத்திச் சென்ற
அந்த மழைக்குப் பிறகு"

உயிர்களுக்குள் சிறியது எது பெரியது எது என்று பேதம் பார்க்க நினைப்பதில்லை கருணையின் மனம். வானம் பொய்த்து பூமி வறண்டு நிலமெல்லாம் விரிசல் ஆகி காணும் இடமெங்கும் கோடை வாட்டி வதைத்து காடுகளுக்குள் கண்ணீரை எழுதி வைக்கும் இயற்கையை கண்ணுறுகையில் சிட்டுக்குருவியின் மீதும் பரிதாபம் பிறந்துவிடுகிறது.

"காய்ந்துபோன மரத்தின் சருகுகளோடு ஒப்பிடுகையில் எடை குறைந்ததாக இருந்தது அந்த சிட்டுக்குருவிகள்".

நம்மைக் காண வரும் ஒவ்வொருவரும் இப்படியான பறவையாக இருந்து விட்டால் நமக்கு கவலைகளும் பிறக்கப் போவதில்லை கண்ணீரும் சுரக்கப் போவதில்லை

"வருவதில்லை ...

"பொய்
பொறாமை
வஞ்சகம்
வயிற்றெரிச்சல்
காழ்ப்புணர்ச்சி
எதிர்மறை எண்ணங்கள்
என்று
எந்த ஒன்றையும்
சுமந்து கொண்டு
என் வீட்டை நோக்கி
எந்த ஒரு பறவையும் வருவதில்லை"

மனிதர்களுக்கு தம்மைத் தவிர பிறர் வெற்றியை அடைந்தாலோ உச்சத்தை எட்டினாலோ பாராட்டுவதற்கு கூட மனம் முன்வருவதில்லை. பிறரின் வெற்றியில் மனம் மகிழும் குணம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து கொண்டே வருகிறது. மனிதர்களிடம் சிறப்பான பாடத்தை நடத்தி விடுகிறது இயற்கை.

"வாழ்த்துகிறது...

வறட்சி நிலையிலும்

கவிஞர் இளையவன் சிவா

வாழ்த்த ஒருபோதும்
தவறியதே இல்லை
ஒவ்வொரு இலைகளையும் உதிர்த்து நிற்கும் சாலையோரத்து
மரமொன்றின் நிழல்."

"மரம் சொல் கேளீர்...

பூமியின் தலைவிதியை
எழுதும் எழுதுகோல்கள் மரங்கள்.
உலகத்தின் நுரையீரல்கள் அவசரநிலை சிகிச்சைப் பிரிவில் உள்ளது"".

"இயற்கை மீதான
மனிதத் தாக்குதல்களை ஆகாயத்தின்
ஆறாத பக்கங்களில்
நாளும் எழுதி வைத்துவிட்டு பறந்து செல்லும் பறவைகள் ஏராளம்."

நம்மை எது உயர்த்திப் பிடிக்கிறது? நாம் கற்ற கல்வியா? நாம் பெற்ற செல்வமா? நாம் அடைந்த அனுபவங்களா? அல்லது நமக்கு கிடைக்கும் வாய்ப்புகளா? இவை அனைத்திற்கும் ஆதியாகி நம்மை உலகிற்கு அறிமுகப்படுத்தப் போவது நமக்குள் பிறக்கும் சொற்கள்.

"கோயில் ....

கடவுளுக்கு பூசை செய்யும் பூசாரிகளுக்கும் கிடைக்கவில்லை
கடவுளை வழிபட வந்த பக்தர்களுக்கும் கிடைக்கவில்லை
அந்த கோவிலுக்குள்
இருந்த அமைதி."

சமூகத்தின் மீதான தனது பார்வையை, இயற்கையை தான் நேசிக்கும் தருணங்களை எழுதிச் செல்லும் மனம் என தனக்குள் விளைந்து நிற்கும் பேரன்பையும் பெருங்கருணையையும் எதார்த்தத்தை உடன் வைத்துக் கொண்டு எளிய சொற்களாலும் வலிமையான தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பதை பறவைகள் எழுதிய வானம் வழியே கவிஞர் சொல்லிச் செல்கிறார்.

கவிஞர் இளையவன் சிவா

# பாவேந்தர் பாரதிதாசன்

நூல் அனுபவம் — கட்டுரை



**1891:** புதுவையில், ஏப்ரல் மாதம் 29 ஆம் தேதி, 1891 ஆம் ஆண்டில் கனகசபை முதலியார் மற்றும் இலக்குமி அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார்.

**1919:** காரைக்காலைச் சேர்ந்த அரசினர் கல்லூரித் தமிழாசிரியாராகப் பதவியேற்றார்.

**1920:** பழநி அம்மையார் என்பவரை திருமணம் செய்து கொண்டார்.

**1954:** புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1960:** சட்டமன்ற தேர்தலில் தோல்வியைத் தழுவினார்.

**1964:** ஏப்ரல் மாதம் 21ஆம் தேதி, 1964 ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார்.

**1970:** அவரது மரணத்திற்குப் பின், அவரது 'பிசிராந்தையார்' நாடகத்திற்காக அவருக்கு 'சாஹித்ய அகாடமி விருது' வழங்கப்பட்டது.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

# நாளை நமதே

வாழ்க்கை என்பது

உனக்காக இடத்தை

தேடுவது அல்ல

உனக்கான உலகத்தை

உருவாக்குவது

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை




தொடர்பிற்கு :
9597887847
8870884969


## அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com